தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 25, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036
2005 ஏப்ரல் 7, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்."

செய்யக்கூடிய செயலைக் குறித்து ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு முயலுபவருக்கு முடியாதது என்று ஒன்றுமில்லை.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் ஆகியோர் 5–4–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நெல்லிக்குப்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை, 1971 முதல் 1976 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1967 முதல் 1970 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் அவர்கள் சைதாப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்கள்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் தூண்டில் வளைவு மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் தூண்டில் வளைவு மற்றும் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது: